අධ්‍යාපන, විද්‍යා සහ තාක්ෂණ අමාත්‍යාංශය
கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
Ministry of Education, Science and Technology
'இසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/4/58/16/01/14
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2024.10.

திரு/ திருமதி/ செல்வி ......................................................................

.......................................
.......................................
.......................................
.......................................

**<u>இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் 2021(2024)</u>**
**<u>பொது நேர்முகப் பரீட்சை மற்றும் வாய்மொழி மூல நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்.</u>**

இலக்கம்: 1928/28 மற்றும் 2015.08.21 திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கமைய, இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினூடாக 2023.07.29ம் திகதியன்று நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய எழுத்து மூலப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மற்றும் வாய் மொழி மூலப் பரீட்சைக்கு தாங்கள் அழைக்கப்படுகின்றீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. இந் நேர்முகப் பரீட்சைக்காக இசுருபாய, பத்தரமுல்ல இல் அமைந்துள்ள கல்வி அமைச்சிற்கு ......................... ம் திகதியன்று மு.ப/ பி.ப ............. மணிக்கு வருகை தருமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அன்றைய தினத்தில் சமூகமளிக்கும் போது அனைத்து ஆவணங்களதும் மூலப் பிரதிகள் உள்ளடங்கிய கோவை ஒன்றையும், அவ் ஆவணங்களின் நகல் பிரதிகளின் மீது அவை உண்மைப் பிரதிகள் என்பதாக விண்ணப்பதாரர் சான்றுப்படுத்தி (குறிப்பி 01 ஐ பார்க்கவும்) குறித்த நகல் பிரதிகளை உள்ளடக்கிய அதனை ஒத்த கோவை ஒன்றையும் (இலக்கம் II முதல் VII வரை), முழுப் பெயர் மற்றும் மொழி மூலத்தைக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சை சபையில் முன்னிலைப்படுத்த வேண்டும்.

I. நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம்

II. தேசிய அடையாள அட்டை/ வெளிநாட்டு கடவுச் சீட்டு

III. பிறப்புச் சான்றிதழ்

IV. சத்தியப்பிரமான பிரகடனம் (தேவைக்கேற்ப )- உரிய கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்கள்/ ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள

பெயர்களில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் அவற்றிற்குரியதாக சத்தியப் பிரமானம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

V. கல்விச் சான்றிதழ்கள் -
- க.பொ.த சாதாரண தரம்
- க.பொ.த உயர் தரம்

  இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வழங்கப்பட்ட
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டச் சான்றிதழ் மற்றும் விவரிக்கப்பட்ட பெறுபேறுகள் ஆவணம்

VI. தற்போது அரச நிறுவனமொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர் எனின் சேவையை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் (இருப்பின்)

VII. அண்மையில் பெற்றுக் கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ்

04. உரிய அனைத்து தகைமைகளும் விண்ணப்பப் படிவம் கோரும் இறுதித் திகதிக்கு முன்னர் (2021.07.30) பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலத்திலேயே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், உரிய கல்வித் தகைமைகளை விண்ணப்பிக்கும் மொழி மூலத்திலேயே பெற்றிருப்பது அத்தியாவசியமானதல்ல.

05. இலக்கம் 2,237 மற்றும் 2021.07.16 திகதியுடைய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு அறிவித்தல் மற்றும் தங்களது விண்ணப்பப் படிவத்திற்கமைய அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து சான்றிதழ்கள்/ ஆவணங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட நகல் பிரதிகளை அன்றைய தினத்தில் நேர்முகப் பரீட்சை சபையினரிடம் முன்னிலைப்படுத்துவது கட்டாயமாகும் என்பதுடன் பின்னராக சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள்/ ஆவணங்கள் என்பது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

06. உரிய பட்டச் சான்றிதழ்களின் விவரிக்கப்பட்ட பெறுபேறுகள் ஆவணங்கள் நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பின்னராக சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களோ அல்லது ஆவணங்களோ கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

07. கல்வித் தகைமைகளைப் பெற்றிருப்பது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் மூலம் எனின்,, உரிய பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதாக குறித்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன்,

பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் அத்தகைய கடிதங்கள் மீண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

08. பொது நேர்முகப் பரீட்சையின் பின்னர் நடைபெறும் வாய்மொழி மூல நேர்முக பரீட்சையின் போது வழங்கப்படும் சம்பக் கற்கையை அடிப்படையாக கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளி வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 01 | தர்க்கவியல் மற்றும் முரண்பாடுகளை தீர்த்தகல் | 10 புள்ளிகள் |
| 02 | தொடர்பாடல் திறன் | 10 புள்ளிகள் |
| 03 | ஆளுமை | 05 புள்ளிகள் |
| | | மொத்தம் 25 புள்ளிகள் |

09. எழுத்து மூலப் பரீட்சையில் தகுதி பெறல் அல்லது பொது மற்றும் வாய்மொழி மூல நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதானது இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு நியமனம் பெற்றுக் கொள்வதற்கான தகுதியல்ல என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

10. அத்துடன், இக் கடிதம் கிடைத்த உடன் வார நாட்களின் அலுவலக நேரத்தில் 0112-787330/ 0112-786674 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு கடிதம் கிடைக்கப்பெற்றமையை உறுதிப்படுத்துமாறும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

11. நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதற்காக பிரயாணச் செலவோ அல்லது வேறு எந்தவொரு கொடுப்பனவோ வழங்கப்படமாட்டாது.

ஆர்.டீ ஜமிந்த ஜயசுந்தர
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(கல்விச் சேவைகள் தாபனம்)

ஒப்பம்: ஜே.எம் திலகா
செயலாளர்

**கவனத்திற்கு**: உரிய தினத்தில நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளாத பட்சத்தில் அதற்காக வேறு தினமொன்று வழங்கப்படமாட்டாது என்பதால் அத்தகைய கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், உரிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையில் பங்கேற்கும் சந்தர்ப்பத்தில் கட்டாயமாக முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

**குறிப்பு 01**: அரச சேவையில்/ மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபனமொன்றில் சேவையாற்றும் விண்ணப்பதாரர் ஒருவர் மேற்படி இலக்கம் (03) இல் தரப்பட்டுள்ள

ஆவணங்களை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரூடாகவும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரர்கள் அரச பாடசாலை அதிபர்/ ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர், பிரிவிற்குரிய கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், அரச/ மாகாண சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது தலைமைப் பிக்கு அல்லது பிற சமயஸ்தலங்களுக்குப் பொறுப்பான மதகுருமார்களான குறிப்பிடத்தக்க நிலையில் உள்ள ஒருவரூடாக சான்றுப்படுத்திக் கொள்ளவேண்டும்.